# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1738/15 - 2011 දෙසැම්බර් 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.12.29

*1738/15 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2004 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டம்***

*22 மற்றும் 26 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 22ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலினூடாக, 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, சர்வதேச தொலைத் தொடர்புகள் இயக்குநர் அறவீட்டு வரி (விதிப்பனவு) ஒழுங்குவிதிகள் 2012.01.01 முதல் பயன் வலுப்பெறும் வகையில் கீழ் குறிப்பிடப்படுவதனைப் போன்று திருத்தியமைக்கப்படுகிறது என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு,*
*2011, திசெம்பர் 29.*

**ஒழுங்குவிதி**

*1. 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதிய 1662/1 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அறவீட்டு வரி (விதிப்பனவு) ஒழுங்குவிதிகள் கீழ் வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன :-*

*(அ) அட்டவணை I இலுள்ள “அ”, “ஆ” மற்றும் “இ” வகுதிகளிலுள்ளவை நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்படுபவை அட்டவணை I இலுள்ள “அ”, “ஆ” மற்றும் “இ” வகுதிகளில் பதிலீடு செய்வதன் மூலம் :-*

*அட்டவணை I*

***வகுதி “அ”***

*(ஒழுங்குவிதி 4)*

**உள்வரும் சர்வதேச அழைப்புகள்மீது செலுத்தவேண்டிய அறவீட்டு வீதம்**

| *வருடம்* | *காலப் பகுதி* | *கட்டணம் (நிமிடமொன்றுக்கு) ஐ.அ. டொலர் சதம்* |
|---|---|---|
| *2011* | *2011.01.01 - 2011.12.31* | *7.00* |
| *2012* | *2012.01.01 - 2012.12.31* | *9.00* |
| *2013* | *2013.01.01 - 2013.12.31* | *9.00* |

### *வகுதி "ஆ"*

(ஒழுங்குவிதி 5)

**உள்வரும் உள்நாட்டுப் பெறுகைக் கட்டணம் (உ. உ. பெ. க.) என்ற வகையில் அறவீட்டு வரிச் செலவின் வீதம்**

| வருடம் | காலப் பகுதி | கட்டணம் (நிமிடமொன்றுக்கு) ஐ.அ. டொலர் சதம் |
|---|---|---|
| 2011 | 2011.01.01 - 2011.12.31 | 5.50 |
| 2012 | 2012.01.01 - 2012.12.31 | 6.00 |
| 2013 | 2013.01.01 - 2013.12.31 | 6.00 |

### *வகுதி "இ"*

(ஒழுங்குவிதி 5, 7 மற்றும் 8)

**தொலைத் தொடர்பு அபிவிருத்திக் கட்டணம் (தொ. தொ. அ. க.) என்ற வகையில் செலவின அறவீட்டு வீதம்**

| வருடம் | காலப் பகுதி | கட்டணம் (நிமிடமொன்றுக்கு) ஐ.அ. டொலர் சதம் |
|---|---|---|
| 2011 | 2011.01.01 - 2011.12.31 | 1.50 |
| 2012 | 2012.01.01 - 2012.12.31 | 3.00 |
| 2013 | 2013.01.01 - 2013.12.31 | 3.00 |

2. 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சர்வதேச தொலைத் தொடர்புகள் இயக்குநர் அறவீட்டு வரி (விதிப்பனவு) ஒழுங்கு விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டு நவெம்பர் 19 ஆந் திகதிய 1680/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் கீழ்க் குறிப்பிடப்படுவதனைப் போன்று திருத்தியமைக்கப்படுகின்றது:

(அ) அட்டவணை I இலுள்ள "அ" (i) மற்றும் "ஈ" வகுதிகளிலுள்ளவை நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்படுபவை அட்டவைண I இல் "அ" (i) மற்றும் " ஈ" வகுதிகளில் பதிலீடு செய்வதன் மூலம் :-

அட்டவணை I

### *வகுதி "அ (i)"*

(ஒழுங்குவிதி 4 (அ), 7 மற்றும் 8)

**குறிப்பீடு செய்யப்பட்ட தொலைபேசி இலக்கம் (கு. செ. தொ. இ.) க்கு உள்வரும் சர்வதேச அழைப்புக்கள் மீது செலுத்தப்படவேண்டிய அறவீட்டு வீதம்**

| வருடம் | காலப் பகுதி | ஒரு தொலைபேசி இலக்கத்திற்கான மாதாந்த அறவீடு (ஐ. அ. டொ.) | மாதமொன்றுக்கு 1500 நிமிடங்களுக்கு மேற்படும் போதான கட்டணம் (ஐ. அ. டொ. சதம்) |
|---|---|---|---|
| 2011 | 2011.01.01 - 2011.12.31 | 3.00 | ஒவ்வொரு மேலதிக நிமிடத்திற்கும் 1.50 |
| 2012 | 2012.01.01 - 2012.12.31 | 3.00 | ஒவ்வொரு மேலதிக நிமிடத்திற்கும் 3.00 |
| 2013 | 2013.01.01 - 2013.12.31 | 3.00 | ஒவ்வொரு மேலதிக நிமிடத்திற்கும் 3.00 |

### *வகுதி "ஈ"*

(ஒழுங்குவிதி 9 மற்றும் 9 (அ)).

**வெளிச் செல்லும் உள்நாட்டுப் பெறுகைக் கட்டணம் என்ற வகையில் அறவீட்டுச் செலவின வீதம்**

| வருடம் | காலப் பகுதி | கட்டணம் (நிமிடமொன்றுக்கு இலங்கை ரூபாவில்) |
|---|---|---|
| 2011 | 2011.01.01 - 2011.12.31 | 2.00 |
| 2012 | 2012.01.01 - 2012.12.31 | 3.00 |
| 2013 | 2013.01.01 - 2013.12.31 | 3.00 |

1- 452

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.